# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| | | |
|---|---|---|
| **தரம்:11** | **சைவநெறி** | **நேரம்:3.00 மணித்தியாலம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| சுட்டெண்:................................................................................ | 12 | T | I | |

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

**மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

1. பிரணவப் பொருளாக விளங்குபவர்

    1. சிவன்  2. விநாயகர்  3. முருகன்  4.விஷ்ணு

2. மகோற்சவத் திருவிழாவின்போது தீர்த்தத் திருவிழா குறிப்பது

    1. படைத்தல்  2. காத்தல்  3. அழித்தல்  4. அருளல்

3. திதிகளுள் ஒன்றாக அமைவது

    1. பிரதமை  2. ரேவதி  3. அச்சுவினி  4. பரணி

4. பிற்காலத் தோத்திரப் பாடல்களாக அமைவது

    1. தேவாரம், திருவாசகம்  2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
    3. கந்தபுராணம், திருப்புகழ்  4. திருப்புகழ், திருவாசகம்

5. புரட்டாதி மாத அமாவாசைக்கு முன் வரும் பதினைந்து நாட்கள்

    1. மகாமகம்  2. மகாளயம்  3. கும்பாபிஷேகம்  4. சிரார்த்தம்

6. ஆகமம் என்பதன் பொருள்

    1. தொன்று தொட்டு வரும் அறிவு  2. இப்படி முன்பு நடந்தது.

    3. பழைமையான வரலாற்றைக் கூறுவது  4. வினையடியாகப் பிறந்த அறிவு

kalvi.lk

7. தேர் அமைக்கும் முறை பற்றிக் கூறும் நூல்

1. சகலாதிகாரம் 2. மானசாரம் 3. சிற்பசாஸ்திரம் 4. பஞ்சாங்கம்

8. சங்கமம் என்பதன் பொருள்

1. அந்தணர் கூட்டம் 2. முனிவர்கள் கூட்டம் 3.சித்தர்கள் கூட்டம்
4. சிவனடியார் கூட்டம்

9. ஆகமம் சாரா வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுவது

1. கிரியைகள் 2. மந்திரங்கள் 3. சடங்குகள் 4. யாகங்கள்

10. உலகப்பற்று, உடைப்பற்று, உடல்பற்று எனும் மூன்று பற்றுக்களையும் விட்டு நிற்கும் மூர்த்தம்

1. வைரவர் 2. வீரபத்திரர் 3. நடராஜர் 4. தட்சணாமூர்த்தி

11. நாட்டார் கலைகளுக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவி

1. நாதஸ்வரம் 2. தவில் 3. உடுக்கு 4. வயலின்

12. சாமகானம் பாடி இறைவன் அருள் பெற்றவன்

1. இராமன் 2. இலக்குமணன் 3. இராவணன் 4. குகன்

13. பழுகாமம் ஆலயத்தில் பூசைகளை ஆற்றுப்படுத்துபவர்

1.பூசாரி 2. கப்பூகனார் 3. கட்டாடிமார் 4. நம்பியார்

14. உலக மக்களின் பசியைப் போக்க பராசக்தி காசியில் அவதரித்த வடிவம்

1.அன்னபூரணி 2. விசாலாட்சி 3. காமாட்சி 4. மீனாட்சி

15. வரத பண்டிதரால் இயற்றப்பட்ட மருத்துவ நூல்

1. சரசோதி மாலை 2. அமுதசாரம் 3. மதங்கசூளாமணி 4. உத்தர கோசமங்கை

16. இலங்கையில் நித்திய அன்னதானம் வழங்கும் ஆலயங்களில் ஒன்று

1. மாவிட்டபுரம் 2. நல்லூர் 3. செல்வச்சந்நிதி 4. கதிர்காமம்

17. கிரியை நெறி நிற்போர் அடையும் முத்தி

1. சாலோகம் 2. சாமீபம் 3. சாரூபம் 4. சாயுச்சியம்

18. உமாபதி சிவாச்சாரியரின் சித்தாந்த அட்டகத்துள் அடங்காதது.

1. திருவருட்பயன் 2. வினாவெண்பா 3. கொடிக்கவி 4. உண்மைவிளக்கம்

19. அருணகிரிநாதருக்கு முருகனால் வழங்கப்பட்ட முதலடி

1. முத்தைத்தரு 2. உலகெலாமுணர்ந்து 3. திகடசக்கரம் 4. மன்னுகதில்லை

20. திருமுறையைப் பாடிய பெண்ணடியார்

1. மங்கையற்கரசியார் 2. திலகவதியார் 3. இசைஞானியார் 4. காரைக்காலம்மையார்

21. இருமலத்தார் எனப்படுபவர்

1. சகலர் 2. பிரளயாகலர் 3. விஞ்ஞானகலர் 4. திருமூலர்

22. வேதத்தின் இறுதிப்பகுதியாக அமைவது

1. பிராமணங்கள் 2. ஆரணியகங்கள் 3. சங்கிதைகள் 4. உபநிடதங்கள்

23. விபுலானந்தரின் இயற்பெயர்

1. ஆறுமுகம் 2. நரேந்திரன் 3. மயில்வாகனன் 4. மோகனதாஸ்

24. திருமணச்சடங்கில் பாணிக்கிரகணம் எனப்படுவது

1. கைப்பிடித்தல் 2. காப்புக்கட்டுதல் 3. அம்மிமிதித்தல் 4. கன்னிகைதானம்

25. "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" எனப் பாடியவர்

1. கபிலதேவர் 2. சேந்தனார் 3. சேக்கிழார் 4. திருமாளிகைத்தேவர்

26. இறைவனுக்கு 108 தடவை பெயர் கூறிச் செய்யும் அர்ச்சனை

1. சகஸ்ரநாமம் 2. அஷ்டோத்திரநாமம் 3. ஸ்ரீருத்திரம் 4. தசருத்திரியம்

**வினா 27 - 30 வரையிலான வினாக்களுக்குப் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக.**

| | | |
|---|---|---|
| A. மெய்கண்டதேவர் | E. தோத்திரப்பாடல்கள் | I. சரஸ்வதி |
| B. சுந்தரமூர்த்திநாயனார் | F.திருத்தொண்டர்தொகை | J. பிரமாண இயல் |
| C. குமரகுருபரர் | G. சிவஞானபேதம் | K. 7ம் திருமுறை |
| D. ஆறுமுகநாவலர் | H. பாலபாடம் | L. நல்லூர் |

27. சந்தான குரவருடன் தொடர்புடைய தொகுதி

1. A,G,J 2. A,G,K 3. A,J,F 4. C,G,J

28. இறைவனுடன் தோழமை உறவு கொண்டவருடன் தொடர்புடையது.

1. F,C,K 2. B,F,K 3. A,F,K 4. D,B,L

29. முருகன் அருளால் பாடல் பெற்றவரின் தொகுதி

1. B,F,K 2. C,L,F 3. C,E,I 4. D,A,L

30. ஐந்தாம் குரவருடன் தொடர்புடைய தொகுதி

1. B,H,K 2. C,E,B 3. C,E,I 4. D,H,L

31. சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

1. 1923 2. 1888 3. 1970 4. 1947

32. அபரக் கிரியைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது

1. வித்தியாரம்பம் 2. அன்னப்பிராசனம் 3. நாமகரணம் 4. சிரார்த்தம்

33. ''மீளா அடிமை'' எனும் பதிகம் பாடப்பட்ட தலம்

1. திருவையாறு 2. திருமருகல் 3. திருவாரூர் 4. திருப்புகலூர்

34. சிவம், சக்தி, நாதம், விந்து இவை குறிக்கும் திருமேனி

1. அருவம் 2. உருவம் 3. அருவுருவம் 4. மேற்கூறிய யாவும்

35. சித்தர் பரம்பரையின் தலைமைச் சித்தர்

1. அகத்தியர் 2. சிவவாக்கியர் 3. கடையிற்சுவாமி 4. திருமூலர்

36. அந்தக்கரணங்கள் எனப்படுவது

1. மெய், வாய், கண், மூக்கு, செவி 2. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

3. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் 3. நிலம், நீர், காற்று, ஆகாயம்

37. ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசியில் கொண்டாடப்படும் பண்டிகை

1. தீபாவளி 2. வருடப்பிறப்பு 3. ஓனம் பண்டிகை 4. விளக்கீடு

38. குரு வழிபாட்டால் முத்தியடைந்த நாயனார்

1. குலச்சிறையார் 2. சேரமான் பெருமாள் 3. சாக்கிய நாயனார் 4. இயற்பகை நாயனார்

39. தானாகத் தோன்றிய லிங்கம் எனப்படுவது

1. தாவரலிங்கம் 2. சுயம்புலிங்கம் 3. மானுடலிங்கம் 4. காணலிங்கம்

40. இலிங்க வழிபாட்டின் மூலம் முத்தியடைந்தவர்கள்

1. திருமூலர், குலச்சிறையார் 2. சிறுத்தொண்டர், இளையான்குடிமாற நாயனார்
3. அப்பூதியடிகள், திருநீலகண்டர் 4. சாக்கிய நாயனார், சேரமான் பெருமாள்

(40X1 = 40)

Education கல்வி அதியாபன

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:........................................................................................ | 14 | T | II |

**கவனிக்க:**

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

### பகுதி – II

**சுருக்கமான விடைதருக.**

**01.**

1. தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கங்கள் இரண்டு தருக?
2. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் இரண்டு குறிப்பிடுக?
3. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் இரண்டு குறிப்பிடுக?
4. உயிர்த்த இயேசு சீடருக்கு காட்சி கொடுத்த சம்பவங்கள் இரண்டு தருக?
5. திருத்தொண்டராக நியமிப்பதற்குரிய பண்புகள் 2 குறிப்பிடுக?
6. பிற இனத்தவரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர் யார்?
7. புனிதயோசவ்வாஸ் அடிகளாரின் புதுமைகள் இரண்டு குறிப்பிடுக?
8. நற்கருணையின் முன் அடையாளங்கள் இரண்டு தருக?
9. இஸ்ராயேலரின் பலிகளின் இரு பிரதான பிரிவுகளைக் கூறுக?
10. இறையன்புக்கு எதிரான பாவங்கள் இரண்டு தருக?

(10x2=20 புள்ளிகள்)

**02.**

1. தூய பேதுரு, இயேசுவின் மீது கொண்டிருந்த நம்பிக்கை அறிக்கையை எவ்வாறு வெளியிட்டார்?
2. இயேசு, பேதுருவிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் எவை?
3. தூய பேதுருவின் முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி, நற்செய்திக்காக நீர் செய்யக்கூடிய செயல்கள் நான்கு தருக

(10 புள்ளிகள்)

**03.**

1. திருச்சபையின் பண்புகளை எழுதுக?
2. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் எவை?
3. உமது பங்கின் வளர்ச்சிக்காக உம்மால் செய்யக்கூடிய பணிகள் எவை?

(10 புள்ளிகள்)

kalvi.lk

**04.**

1. யூத பாஸ்காவில் முக்கியம் பெறும் விடயங்கள் எவை?
2. கல்வாரிப் பலி உன்னத பலியாக விளங்கக் காரணங்கள் மூன்று எழுதுக?
3. பிறருக்காக உமது வாழ்வை அர்ப்பணமாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)

**05.**

1. இலங்கையில் மறைப் பாடசாலைகள் அமைக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?
2. இலங்கையில் உள்ள மறைமாவட்டங்கள் 6 எழுதுக?
3. மறைப்பாடசாலைக்கு செல்லாத உமது நண்பனுக்கு நீர் கூறக்கூடிய அறிவுரைகள் நான்கு தருக.

(10 புள்ளிகள்)

**06.**

1. முதலாம் கட்டளை எவற்றை அடிப்படையாகக் கொண்டது?
2. இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் மூன்று எழுதுக?
3. ஞாயிறு தினத்தை நீர் எவ்வாறு புனிதமாக அனுசரிப்பீர்?

(10 புள்ளிகள்)

**07.**

பின்வருவோரில் இருவரைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

1. புனித அன்னை திரேசா
2. திருத்தந்தை பிரான்சிஸ்
3. அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ
4. அருட்பணி யாக்கோமே கொண்சால்வேஸ்
5. புனிதயோசேவ்வாஸ் அடிகளார்

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## சைவநெறி தரம் - 11

## (புள்ளித்திட்டம்)

**பகுதி 1**

1. விநாயகர்
2. அருளல்
3. பிரதமை
4. கந்தபுராணம், திருப்புகழ்
5. மகாளயம்
6. தொன்று தொட்டு வரும் அறிவு
7. மானசாரம்
8. சிவனடியார் கூட்டம்
9. சடங்குகள்
10. வைரவர்
11. உடுக்கு
12. இராவணன்
13. நம்பியார்
14. அன்னபூரணி
15. அமுதகாரம்
16. செல்வச்சந்நிதி
17. சாமீபம்
18. உண்மை விளக்கம்
19. ''முத்தைத்தரு''
20. காரைக்காலம்மையார்
21. பிரளயாகலர்
22. உபநிடதம்
23. மயில்வாகனன்
24. கைப்பிடித்தல்
25. கபிலதேவர்
26. அஷ்டோத்திரநாமம்
27. A,G,J
28. B,F,K
29. C,E,I
30. D,H,L
31. 1923
32. சிரார்த்தம்
33. திருவாரூர்
34. அருவம்
35. திருமூலர்
36. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
37. தீபாவளி
38. குலச்சிறையார்

Education கல்வி අධ්‍යාපන

39. சுயம்புலிங்கம்
40. சாக்கிய நாயனார், சேரமான் பெருமாள்

(40 X 1 = 40)

பகுதி 2

01. 1. உத்தராயணம், தட்சிணாயனம்
2. எழுதாமறை, சுருதி, அபௌருஷேயம், மறை, நால்வேதம்
3. ஆலய அமைப்பு, படிம இலக்கணம், வாகனம், தேர் அமைக்கும் முறை
4. அடியார் இயல்பு, பூசகர் ஒழுக்கம்
5. புகழனார், மாதினியர்
6. திருவாசகம், திருக்கோவையார்
7. அன்பு, கருணை, மூத்தோரை மதித்தல், பணிவு, இன்சொல் பேசுதல்
8. மன அமைதி, இறை பக்தி, கேட்டவரம் கிடைக்கும், நினைத்தது நடக்கும்.
9. தோடுடைய செவியன், காதலாகிக் கசிந்து…..
10. மட்டக்களப்பு புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதை ஆலயம்

( 10X2=20)

02. தரம் 10, 11 பாடநூலில் மனனஞ் செய்ய வேண்டிய பகுதியில் உள்ளது.

தேவாரம் — 3
பொழிப்பு — 2
5

(5 X 2 = 10)

03. I. சிவ, சிவ என துயில் எழுதல், காலைக்கடன் முடித்து சுவாமி அறையில் பூவும், நீரும் வைத்து வழிபடல், தோத்திரப் பாடல் பாடுதல்
II. அதிகாலையில் துயில் எழுதல், மருத்து நீர் வைத்து நீராடுதல், புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல், சுபவேளையில் கைவிசேடம் பெறுதல், சுபகாரியங்களை ஆரம்பித்தல்
III. சைவ பரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமாமன்றம்.

(3+4+3=10)

04. I. நயினை நாகபூசணியம்மன் ஆலயம்
II. கங்காதர புட்கரனி, வன்னிமரம்
III. கீரிமலை, திருக்கேதீச்சரம், முகத்துவாரம், அமிர்தகழி
IV. திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம்
திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார்

(3+3+4=10)

05. I. திருவருட்பயன் - உமாபதிசிவாச்சாரியார்
II. ஆணவம், மூலமலம், சகசமலம், இருள்மலம்

III. பசு பதியைச் சாரும் போது சத்தாகவும், பாசத்தைச் சாரும் போது அசத்தாகவும் இருப்பதால்

(3+3+4=10)

06. I. கந்தபுராணம், கச்சியப்பர்

II. சயந்தன், தேவர்கள், வீரபாகுதேவர்

III. வீரபாகுதேவர் சூரபத்மனுடைய நகருக்குள் சயந்தனையும், தேவர்களையும் மீட்பதற்காக சென்றமை.

(3+3+4=10)

07. சிறுகுறிப்பு தரம் 10, 11 பாடநூலில் உள்ளது.

குறிப்பு : ஐந்து விடயங்கள் கூறி இருப்பின் ஐந்து புள்ளி வழங்குக.

( 5X2=10)

Education கல்வி அධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

**இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.**

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**



**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.**

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page